[1970 ஏப்ரல் 2

## சென்னை உருக்கு உருளை ஆலையில் சோதனை

* 639 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1969 ஏப்ரல் திங்கள் 19-ம் நாள் அளவில், சென்னை மாநகரில் உள்ள உருக்கு உருளை ஆலையின் வளவுகளில் ஏதேனும் திடீர் சோதனை செய்யப்பட்டதா ?

(இ) மத்திய அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் எவையேனும் கைப்பற்றப்பட்டனவா ?

(உ) இம்மாநிலத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான சொத்துக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) கைப்பற்றப்பட்டன.

(உ) இம்மாநிலத்தில், மாநில அரசின் சொத்துக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது போல் இம்மாநிலத்தில் உள்ள மத்திய அரசின் சொத்துக்களனைத்திற்கும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மாநில அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் களவாடப் பட்டாலும் அல்லது மத்திய அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் களவாடப்பட்டாலும், அக்களவுகள் குறித்து பதிவு செய்யப்பட்டு, புலனாய்வு செய்யப்பட்டு, அவற்றின் தகுதிக்கேற்ப முடிவு செய்யப் படுகின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** எந்தத் தகவல் மீது எங்கெங்கே சோதனை செய்யப்பட்டன ? எந்த எந்தப் பொருள்கள் கைப்பற்றப் பட்டன ? அவற்றின் மதிப்பு என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** செங்கல்பட்டு காவல் நிலையத்தில் செங்கல்பட்டு ரயில்வே நிலையத்திற்குச் சொந்தமான துண்டு துண்டு தண்டவாளங்கள் களவாடப்பட்டிருப்பதாக ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சென்னை எழும்பூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சென்னையைச் சேர்ந்த சாகுல்அமீது என்பவரைப் பிடித்து அவர் சென்னையில் அந்தத் துண்டுத் தண்டவாளங்களை விற்றிருப்பதாகக் கண்டுபிடித்தார்கள். கொருக்குப்பேட்டையைச் சேர்ந்த உருக்கு ஆலையைச் சோதனை யிட்டு 79 பவுண்டு 59 துண்டு தண்டவாளங்களைக் கைப்பற்றி யிருக்கிறார்கள்.

**திரு. நா. வீராசாமி :** பொதுவாகச் சில சமூக விரோதிகள் அரசாங்கச் சொத்துக்களைக் களவாடுகிறார்கள். மத்திய அரசாங்கப்

பொருள்களுக்குப் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. மாநில அரசின்
1970 ஏப்ரல் 2]
சொத்துக்களுக்கும் அதுபோல குறிகளைப் போட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பெயர் போடப்பட்டவைகள் மத்திய அரசாங்க சொத்து என்றால் பெயர் போடப்படாதவைகள் மாநிலத்தவை.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, ஸ்டீல் ரோலிங் மில்லினுடைய அதிபர் யார் என்பதைத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விநாயகர் உருக்கு உருளை ஆலை என்று இருக்கிறது, யார் என்று தெரியவில்லை.

**with your permission,I Want, to put qustion Sir.** இந்த விநாயகர் உருக்குத் தொழிற்சாலைக்கு

**திரு. கே. விநயகம் :**
கே. விநயகம், எம்.எல்.ஏ. அதிபர் அல்ல என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைப்பற்றி ஆராய வேண்டும்.

### *Leper prisoners*

*645 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether separate provision has been made in jails in the State for keeping leper prisoners; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு சிறையிலும் தொழுநோய்க் கைதிகளுக்கென தனித் தொகுதிகள் அல்லது அறைகள் உள்ளன. ஒரு மாதத்திற்குட்பட்ட சிறைத் தண்டனை பெற்ற தொழுநோய்க் கைதிகள், அவர்கள் அனுப்பப்படும் சிறையில் மற்ற கைதிகளினின்று தனித்து வைக்கப் பெறுவர். ஒரு மாதம் அல்லது அதற்கு மேல் சிறைத்தண்டனை பெற்ற தொழுநோய்க் கைதிகள் வேலூரிலுள்ள மத்திய சிறைக்கு மாற்றப்பட்டு அத்துடன் இணைக்கப்பட்டுள்ள தொழுநோயினர்க்கான கட்டிடப் பிரிவில் வைக்கப்படுவர்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, இம்மாதிரி தொழுநோய்க்கு ஆளான கைதிகளைத் தனியாக வைத்து மனிதாபிமானத்தின் பேரில் அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.